பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி வியாழன் வெளியீடு.

போர் 1. | பொள்ளாச்சி. 14-6-51. விலை அரையணா. | வெற்றி 18.

அதிசயிக்கத்தக்க அற்புதங்களை செய்துகாட்டி விட்டார் ஸ்ரீ ஜி. டி. நாயுடு.

14-அடி உயரமும் ஒன்று அல்லது ரொம்ப அரிதாக இரண்டு கொண்டையுள்ள சோளப்பயிரைத்தான் நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால் 24-அடி உயரமும் 14-லிருந்து 39-கொண்டைகளுமுள்ள சோளப்பயிரை சிருஷ்டித்திருக்கிறார் ஒருவர் ஒரு பப்பாளி மரத்தில் ஆறு விதபழங்கள் காய்க்கும்படி அவரே செய்திருக்கிறார். இது கட்டுக்கதையல்ல, கண்கட்டி வித்தையும் அல்ல. முழுக்க, முழுக்க முற்றிலும் உண்மை. இந்த அற்புதங்களை சாதித்துள்ளவர் ஒரு தமிழர். கோவையைச் சேர்ந்த 55-வயதான ஸ்ரீ ஜி டி. நாயுடு தான் அவர். இவ்வித அற்புதங்களை சாதிப்பது இவருடை ஒப்வு நேர பொழுதுபோக்குத்தான் என்றால் நீங்கள் இன்னமும் ஆச்சரியப்படுவீர்கள்.

ஸ்ரீ ஜி. டி. நாயுடு வேறு பலதுறைகளிலும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறார். கோவையில் இவர் நடத்தும் பஸ்சர்வீஸ் அதற்கு நல்ல உதாரணமாகும். பிரயாணிகளுக்கென கட்டப்பட்டுள்ள தற்கால மோஸ்தரில் தங்குமிடங்கள், பஸ்வண்டிகள், பஸ் நிலையங்கள் எல்லாம் துப்புத்துருவில்லாமல் சுத்தமாக 8-வருஷங்களுக்கு முன் திறக்கப்பட்டபோது இருந்த நிலைமையில் இன்றும் வைக்கப்பட்டுள்ளன.

எவரேனும் எச்சில் துப்பி அசுத்தமாக்கினால் அதற்குத் தண்டனையாக அந்தநபரே துடைத்து சுத்தமாக்கவேண்டும். இஞ்ஜினியரிங் கைத்தொழில் சம்மந்தப்பட்ட பல துறைகளில் மாபெரும் கல்வி போஷகராகவும் தொழில்ஸ்தாபகராகவும் விளங்கும் ஸ்ரீ ஜி. டி. நாயுடு உண்மையிலேயே லட்சத்தில் ஒருவர்தான் என ஒரு சமயத்தில் பிரபல விஞ்ஞானியான சர். சீ. வி. ராமன் அவரை வர்ணித்திருக்கிறார் ஸ்ரீ நாயுடுவின் தயாள சிந்தை, கல்வி மன்றங்களை ஸ்தாபிக்கும் ஆர்வம் அவருடைய ஆச்சரியமிக்க சுறுப்புத்தன்மை, ஹாஸ்யப்பேச்சு இவைகளை யாரும் பாராட்டாது இருக்கமுடியாது. இன்னும் அவருடைய பங்களாவான கோபால் பாக்கில் உள்ள அதிசயங்களை விரைவில் எழுதுவோம்.

நேயர் தபால்!

மத்திய பஸ்நிலையம் தேவை

நகர சபையார் கவனிப்பார்களா?

பொள்ளாச்சி நகரிலிருந்து பல ஊர்களுக்கு பல கம்பனி பஸ்கள் போகிறது ஆனால்நகரில் செண்ட்ரல்பஸ் ஸ்டேண்ட் ஒன்று இல்லாததால் பொதுஜனங்களுக்கு எந்த பஸ் எங்கு செல்கிறது, என்ற நிச்சயமான இடம் தெரியாததால் கஷ்டப்படுகிறார்கள். இதைத்தவிர்க்க மற்ற நகரங்களில் இருப்பதுபோல் நமதுநகரிலும் ஒரு செண்ட்ரல் பஸ் ஸ்டேண்ட், நகர சபையார் ஏற்படுத்தி எல்லா கம்பனி பஸ்களும் அங்கு வந்து நேரம் கொடுத்துப் போவதற்கு ஏற்பாடு செய்தால் நகரசபைக்கும் நல்ல வரும்படி கிடைக்கும் பொது ஜனங்களுக்கும் சௌகரியமாக இருக்கும். ஆகையால் இதை நகரசபையார் கவனித்துச்செய்வார்களாக.

இப்படிக்கு,
யு. கே. ஷண்முகம் செட்டியார்,
தலைவர்,
ஸ்ரீ காந்தி ஹரிஜன ஹாஸ்டல்
பொள்ளாச்சி.

நிவாரண வேலை.

கோவைஜில்லா காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி ஸ்ரீ பி. எஸ். ரங்கசாமி பஞ்ச நிவாரணக்கமிட்டியின் வேலைகளை அறிவிக்கிறார்.

(தாராபுரம் தாலூக்கா)	
நவக்கொம்பு	850
ஊதியூர்	550
வடுகபட்டி	450
படியூர்	450
காங்கயம்	550
ஓலப்பாளையம்	550
நத்தக்காடையூர்	400
(பல்லடம் தாலூக்கா)	
பல்லடம்	600
லட்சுமநாய்க்கன்பாளையம்	450
கேத்தனூர்	450
பெருந்தொழுவு	450
ரங்கசமுத்திரம்	300
(வீரபாண்டி ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.)	
(உடுமலைப்பேட்டை தாலூக்கா)	
மேட்டுப்பாளையம்	30[illegible]
பொன்னேரி	450
ராமச்சந்திராபுரம்	450
மெட்ராத்தி	600
(பொள்ளாச்சி தாலூக்கா)	
கோலார்பட்டி	700
கொல்லபட்டி	850
தொண்டாமுத்தூர்	450
(கோவை தாலூக்கா)	
செட்டிபாளையம்	500

ஆகமொத்தம் 10350-பேர் வாரப் முடிய கஞ்சிபெற்றுக்கொள்கிறார்கள்.

நகரசபைக் கூட்டம்.

நாளது 15-6-51 ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு முனிசிபல் ஆபீஸில் நகரசபையின் சாதாரண கூட்டம் நடைபெறும் என நகரசபைத்தலைவர் ஸ்ரீ பி. கே. சேதுராமசாமிக் கவுண்டர் அவர்கள் தெரிவிக்கிறார்.

செல்வாக்கு மிகுந்த தமிழ் வாரப்பத்திரிகை.

பொள்ளாச்சி 14—6—51. வியாழன்.

ரேஷனிங் ஆபீஸர்.

பொள்ளாச்சி நகருக்குப் புதிதாக ஸ்ரீ எம் நடராஜ முதலியார் ரேஷனிங் ஆபீஸராக வந்துள்ளார். இவர் ரேஷனிங் அட்வைசரி கமிட்டிக்கூட்டத்தில்பேசுகையில் கூடுமானவரை குற்றங்களை மன்னித்து விடுவதாகவும், பெரும்பாலும் பெண்கள் பெயரால்தான் குற்றங்கள் நடைபெறுவதாகவும் அதை மன்னிக்க வேண்டியிருக்கிறதென்றும் கூறியதற்காக அவரைப்பாராட்டுகிறோம்.

நகரில் ஸ்டாக் நிலைமை திருப்திகரமாய் இருப்பதாகவும், கூடுமானவரை அரிசியே கொடுக்க எற்பாடு செய்வதாகவும் கூறியதற்கு சந்தோஷப் படுகிறோம். ரேஷன் ஷாப்புகளில் சோளம்கட்டாயம்வாங்கவேண்டுமென்பதில்லை. சோளத்திற்கு பதிலாக கோதுமை கொடுக்கசொல்லியிருப்பதாகவும் கூறினர். இது அமுல் நடக்குமென்று நம்புகிறோம்.

ரேஷன் ஷாப்புகளில்ஒரு வீசை சர்க்கரைக்கு முதல் தடவையில் அரைவீசை போட்டால் அடுத்ததடவை வரும்போது பழைய பில்லைக்கொண்டுவரும்படி சொல்கிறார்களாம். இது நடைமுறையில் சாத்தியமில்லை. இதை ரேஷனிங் ஆபீஸர் கவனிக்கவேண்டுகிறோம். ரேஷன் ஷாப்புகளிலிருந்து வாங்கிப்போகும் சாமான்கள் குறையாது இருக்கவும் பார்த்துக்கொள்வார் என்று நம்புகிறோம்.

ரேஷனிங் ஆபீஸிற்கு வருபவர்களை உடனுக்குடன் அலுவல்களை கவனித்து அவர்கள் குறைகளைக்கேட்டு பதில் சொல்லி அனுப்புகிறார் வெகு சாமர்த்தியமாக. எழுத்துவாசனை அறியாத ஏழை எளியவர்கள் ரேஷனிங் ஆபீஸில் நாள் கணிக்கில் காத்து நடக்காது காரியம் கவனிப்பார் என்றும் நம்புகிறோம். ரேஷன் குற்றம் செய்பவர்கள் இரண்டு ரூபாய் அபராதம் கொடுப்பதற்காக கோவை — திருப்பூர் கோர்ட் செல்லவேண்டி இருக்கிறது. செலவு 10-ரூபாய் ஆகிறது. ஆகவே கூடுமானவரை கோர்ட் போகாமல் பார்த்துக் கேட்டுக்கொள்ளுகிறோம். மொத்தத்தில் புதியதாக வந்துள்ள ரேஷனிங் ஆபீஸர் பொதுமக்கள் நலனில் கருத்தைச்செலுத்துவார் என நம்பி நல்வரவு கூறுகிறோம்

பொள்ளாச்சி முனிசிபல் எல்லையில் உள்ள வாக்காளர்கள்.

வார்டு.	எழுதப்படிக்க தெரிந்த வாக்காளர்கள.	இப்போது வயது வந்த வாக்காளர்கள்.
1	788	1460
2	755	2202
3	738	1363
4	920	888
5	482	465
6	525	771
7	534	1067
8	606	460
9	406	977
10	907	1251
11	3[illegible]2	475
12	523	884
13	339	899
14	553	941
15	299	535
16	373	346
மொத்தம்	9080	15090

செய்திகள்.

முதியோர் கல்வி.

ஊத்துக்குளியில் நடைபெற்று வரும் முதியோர் கல்விப் பள்ளிக்கு ஷை கமிட்டியின் காரியதரிசி ஸ்ரீ பி. எஸ். சுப்பையன் ரேஞ்சு பள்ளிகளின் ஜூனியர் டிப்டி இன்பெக்டர் ஸ்ரீ கிருஷ்ணசாமிராஜா ஆகிய இருவரும் புதன் இரவு விஜயம்செய்து முதியோர்கள் அங்கு கல்வி கற்று வருவதை பரீச்சைசெய்து பார்த்தனர். பின்னர் முதியோர் கல்வியின் அவசியம், ஷை பள்ளி நடத்தும் முறை இவைகளைப்பாராட்டி ஸ்ரீமான்கள் பி. எஸ். சுப்பையன், கிருஷ்ணசாமிராஜா, யு கே. ஷண்முகம் செட்டியார், டி. ராமலிங்கம் பிள்ளை ஆகியோர் பேசினார்கள். ஆசிரியர் ஸ்ரீ திருமூர்த்திபிள்ளை நன்றி கூறினர்.

பொதுக்கூட்டம்.

பொள்ளாச்சி தாலூக்கா காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் சூலக்கல்மாரியம்மன் சன்னிதானத்தில் புரவிபாளையம் ஜமீன்தார் தலைமையிலும், பின்னர் கே. எம். கோவிந்தசாமிக் கவுன்டர் தலைமையிலும் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அது சமயம் கோவை ஸ்ரீமான்கள் ஆர். ஏ. ஷண்முகத்தேவர், கே. பி. திருவேங்கடம் நாகப்பபிள்ளை ஆகியோர்கள் பேசினார்கள் பின்னர் காரியதரிசி ஸ்ரீ ஆர். பி. ஆறுமுகக்கவுண்டர் வந்தனோபசாரம் கூறினர்.

ஸ்ரீகாந்தி ஹரிஜன ஹாஸ்டல் புது நிர்வாகிகள்.

யு. கே. ஷண்முகம் செட்டியார்,
தலைவர் & பொக்கிஷதார்.
பி. எஸ். சுப்பையன்
உபதலைவர்.
ஏ. கே. சுப்ரமணிய செட்டியார்,
காரியதரிசி.
பி ஷண்முகசுந்திரம்,
உபகாரியதரிசி.

கமிட்டி அங்கத்தினர்கள்.

நா. மகாலிங்கம், பி. கே. தர்மலிங்கக் கவுண்டர், என். வி. ராஜாகோபால், பி. குமாரசாமிக் கவுண்டர், பி. நாராயணசாமி நாயுடு, கே. எம். கோவிந்தசாமிக் கவுண்டர், வி. என். ஆறுமுகம், கல்லாபுரம் முத்தையன், டி. ராமலிங்கம் பிள்ளை, சு. வேலுசாமி, எஸ். கருப்புசாமி, பி. கே. ராமசாமிக்கவுண்டர் மற்றும் ஷை ஹாஸ்டலுக்கு வார்டனாக க. சுப்பையன் நியமிக்கப்பட்டார். காரியதரிசியால் தேநீர் விருந்து அளிக்கப்பட்டு இனிது முடிவுற்றது.

நடக்க இருப்பவை.

காங்கிரஸ் பொதுக்கூட்டம்.

நாளது 19-ம் தேதி செவ்வாய் மாலை 7-மணியளவில் மலையாண்டிபட்டணத்தில் தா. கா. கமிட்டியின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் திண்டுக்கல் ஆர். எஸ். மணி பாரதி பவானி பி. ஏ. ராஜாகோபால் கோவை பி. எஸ். ரக்ஷிதாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். மேலும் ஷை பேச்சாளர்கள் 20-ம் தேதி புதன் அன்று நெகமத்தில் நடக்கும் பொதுக்கூட்டத்திலும் பேசுவார்கள்.

உணவை வீணாக்காதீர்கள்.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட்,
நாகமாணிக்கம் செட்டியார் ௳ பிரதர்,
கடை வீதி

மாடர்ன் கபே.
போர்டிங் ௳ லாட்ஜிங்,
கடை வீதி ௳ கச்சேரி வீதி.

தரத்தில் உயர்ந்தவை
வெண்புரு பீடிகள்.

முத்துகுமார் ஸ்டோர்ஸ்,
மின்சார விளக்கு ஒலிபெருக்கி
அமைக்கவும் பிரசித்தி பெற்றஇடம்.

S. P. M கொடிமஜீத் பீடி
அங்கு விலாஸ் கடை,
ஏஜண்டு: . . . செட்டியார்.

P பட்டாபி செட்டியார்,
. . ஜெனரல் மர்ச்சண்ட்,
கடை வீதி.

வில்மார்க் பீடிகள்,

குணத்தில் உயர்ந்தது.

S. R. V. லாட்ஜிங்கில்
சுகாதார முறைப்படி நல்லகாற்றோட்ட
முள்ள ரூம்கள் வாடகைக்கு விடப்படும்

தினமணி & கதிர்
கிடைக்குமிடம்
ஜகதீஸ் & கோ., கடை வீதி.

கண்டியம்மன் கம்பெனி.
கோயமுத்தூர் ரோடு,
மோட்டார் ஆயில் எஞ்ஜின், பம்பு
செட்டுகள் எலக்ட்ரிக் சாமான்கள்,
மற்றும் மெஷினரி சாமான்களும்
குறைந்த விலையில் எங்கள்
கம்பெனியில் கிடைக்கும்.

உரிமையாளர்:—
C. ரங்கசாமி கவுண்டர்.

கே:— நம் நகரில் உள்ள முஸ்லீம்கள் மயானத்தில் அடக்கம்செய்ய இடம் சரியாக இல்லாமல் இருக்கிறது. இதைச்சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?
(ஏ. ரசித்.)

ப:— கவனிப்பார்களா என்று பொறுத்திருப்பாருங்கள்!

கேள்வி—பதில்.

கே:— நகருக்கு மாபெருந்தலைவர்கள் விஜயம் செய்தால் அவர்களுக்கு பணமுடிப்பு வழங்குவதன் நோக்கமென்ன? அவ்வாறு வழங்குவதைப்பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன? பணமுடிப்பு வழங்கும் கட்சியின் முன்னேற்றத்திற்காகவே அத்தொகையை கொடுத்துவிட்டுச் செல்லக்கூடாதா?
(இளைஞன்)

ப:— கட்சியின் வளர்ச்சிக்காகவும், கட்சியின் வேலைகள் திறம்பட நடப்பதற்காகவும் தலைவர்களிடம் பணமுடிப்பு கொடுக்கிறார்கள். சில தலைவர்கள் அப்பணத்தை கொடுத்துவிட்டுச் செல்கிறார்கள். சிலர் கொடுக்காமலும் செல்கிறார்கள்.

கே.— வாசியின் 10-வது இதழில் க. கிருஷ்ணசாமி என்பவர் முத்தமிழ்சோலையின் துணையாசிரியர் பைந்தமிழன் சொந்தப்பெயர் என்ன? என்றுகேட்டார். அக்கேள்வியைக் கேட்டவர் பைந்தமிழன் சகோதரர்! தம்பிக்கு அண்ணன் பெயர் தெரியவில்லையா? அல்லது தன் பெயர் வாசியில் வரவேண்டுமென்பதற்காக செய்த சூழ்ச்சியா? அண்ணன்புகழ் பரவவேண்டுமென்ற தந்திரமா?
(தா. நடராஜன்.)

ப:— இப்படியும் சில பிரகஸ்பதிகளும் இருக்கத்தான்செய்கிறார்கள். இனிமேலாவது இவர்கள் இப்படி எழுதாமல் இருப்பார்களா?

கே:— மாயவரம் திராவிட எதிர்ப்பு மகாநாட்டில் கலந்துகொண்ட சென்னை சட்டக்கல்லூரி மாணவி டி. என். அனந்தநாயகியின் கண்ணில் திராவிட இயக்கத்தவர்கள் மண்ணைத் தூவினது உண்மையா? இதற்காக அவர்களுக்கு என்ன பட்டம் கொடுக்கலாம்? (எஸ். பழனிச்சாமி.)

ப:— உண்மை தான்! ஏமாந்தவர்கள் கண்ணில் மண்ணையும் தூவுவார்கள் சமயத்தில் மிளகாய்பொடியும் போடுவார்கள் இந்தப் புல்லுருவிகள்! இவர்களுக்கு நீர் என்ன பட்டம் வழங்கினாலும் தகும்!

கே:— நமது சென்னை மாகாணத்தில் எத்தனை காலேஜ்கள் உள்ளன? கோவை ஜில்லா இளைஞர் காங்கிரஸ் தலைவர், காரியதரிசியின் பெயர் என்ன? தலைவர் காமராஜ் நம் நகருக்கு விஜயம் செய்வார்?
(சி. டி. பி. சிங்)

ப:— மொத்தம் 115 கல்லூரிகள். தலைவர் நா. மகாலிங்கம், காரியதரிசி கே. ராஜகோபால். தலைவர் அநேகமாக இம்மாத முடிவில் விஜயம் செய்வார் எனஎதிர்பார்க்கலாம்.

பேசுவார்கள்.

நாளது 18-ம் தேதி திங்கள் மாலை6-3 மணியளவில் தேர்நிலைவெளியில் நகர கா கிரஸ் கமிட்டியின் சார்பில் ஒருமாபெரு பொதுக்கூட்டம் நடைபெறும். அதுச யம் திண்டுக்கல் ஆர். எஸ். மணிபாரதி பவானி பி. ஏ. ராஜகோபால் மற்றும் பல சொற்பொழிவாற்றுவார்கள். அனைவரு வருக!

[சிறுகதை]

கல்யாணப் பரிசு!

(அ. பாசித்,

(சென்றவாரத் தொடர்ச்சி.)

சுய உணர்வு வந்ததும் சுற்றுமுற்றும்பா த்தேன் ஆம்... அதோ — என் மது ... ஒ மூலையில் நிற்கிறான். மது என்று பலமா கூவி மணவறையைவிட்டு ஓடிச்சென்று அ னைத்தழுவி ஆனந்தக் கண்ணீர் விடடேன்.

மறுநாள் அவனிடம் எங்குசென்றிருந்தா என்று கேட்டேன். ராதா உன் மனைவி லட் சுமி என் அப்பா வேலைபார்க்கும் மில் மு லாளியின் மகள். நான் ஏதோ குரும்பா போட்டோ எடுத்து விட்டேன். ஆனால் அ என் அப்பாவிடம் சொல்லி வெகுதூரம்வ பரப்பி விட்டாள், உனக்கு நான் ஏன் கடித எழுதவில்லை என்றால் நான் பம்பாயில் இரு பது யாருக்கும் தெரியக்கூடாது என்பதா தான்.

என்னை மன்னித்துவிடுவாதா! ராதாசெ றவாரம் உன் திருமண அழைப்பை பத்தி கைகளில் பார்த்தேன். அப்போதுதான் எ மனம் நிம்மதியடைந்தது. உடனே அன் பார்க்கில் எடுத்த இரண்டு போட்டோக்க யும் ஒன்றாகப்பதிவு செய்து அதை பெரித வாக்கி உனக்குப்பரிசாக அளித்தேன் எ றான்.

இது எனக்கு மிகவும் ஆச்சரியத்தை உ டாக்கியது. அப்போது லட்சுமி தன்கையி லேயே அந்த போட்டோவை சுவற்றில் மா டிக்கொண்டிருந்தாள். நானும் மதுவும் அ ப்பார்த்து ரசித்துக்கொண்டிருந்தோம். லும் எங்களுடன் லட்சுமியும் சேர்ந்து ரசி தாள் என்றால் கேட்கவும் வேண்டுமோ!

காங்கிரஸ்

(காந்தி தாசன், நெகமம்.)

அன்புத் தமிழர் புவியினிலே-ஒளி
ஆதவன்போலே சுடர் வீசி
இன்பந்தந்து இருள் நீக்கி - இன்று
எழுந்து ஆள்வது காங்கிரஸடா!
குளிர்தனை ஏந்திடும் முழுமதிபோல் - இக
குவலயமீதில் நீதியுடன்
ஒளிர்ந்து மக்களை உயர்நிலைக்கு - இன்று
ஓட்டிச் செல்வது காங்கிரஸடா!

ஹாஸ்டல் கூட்டம்.

ஞாயிறு காலையில் ஹரிஜன ஹாஸ்டல் கமிட்டிக்கூட்டம் தலைவர் யு. கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வரும் ஆண்டிற்கு ஷை ஹாஸ்டல் தலைவராக ஸ்ரீ யு. கே. ஷண்முகம் செட்டியார் அவர்களையே ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. முன்பிருந்தக் கமிட்டி செய்து வந்த சேவைக்கு வந்தனம் தெரிவித்து கலைக்கப்பட்டது.

புதியக் கமிட்டி அமைக்கும் பொருப்பு ஷை தலைவரிடமே ஒப்புவிக்கப்பட்டது. புதிய கமிட்டி அமைத்து அதன் முதல் கூட்டம் 10-ம் தேதியில் தலைவர் கூட்ட வேண்டும் புதிதாக ஒன்பது மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 50—51-ம் வருடத்திற்கு மொத்த செலவு ரூபாய் 3689—0—10 அங்கீகாரம் செய்யப்பட்டது.

வரப்பெற்றோம்.

"திராவிடத் தென்றல்" அட்டைப்படம் அழகாய் இருக்கிறது விலை இரண்டணா என்பது மிகவும் குறைவுதான்.

"ஊர் வம்பு" விலை 0—1—6 தான். வாங்கிப்படிக்கலாம்.

உயர்ந்த மருந்துகள்! நாணயமான விலை!!

உங்களுக்கு சேவை செய்வதே எங்களின் கருத்து!!!

சகல விதமான இங்கிலீஷ் மருந்துகளும், ஆயுர்வேத மருந்துகளும் மிகவும் சரசமான விலையில் நம்பிக்கையோடு கிடைக்குமிடம்.

எல். எஸ். மணி & கோ,

இங்கிலீஷ் மருந்து ஷாப், கெமிஸ்ட்ஸ் & டிரக்கிஸ்ட்ஸ்,

தேர்முட்டி வீதி, O—O பொள்ளாச்சி.

குறிப்பு:— டாக்டர் பிரெஸ்கிரிப்ஷன்களுக்கு [சீட்டுகளுக்கு] தேர்ச்சிபெற்றவரால் 24-மணி நேரமும் எங்களிடம் கிடைக்கும்.

அன்பளிப்பு.

6—6—51 ம் தேதி செல்வன் என். எஸ். ராமசாமிக்கும் ஸ்ரீ கே. எஸ். சொக்கலிங்கம் செட்டியார் செல்வி மீனாக்ஷிக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்ற போது ஏராளமானநண்பர்கள் பந்துக்கள் வந்திருந்து தம்பதிகளை ஆசிர்வதித்துப் பரிசுகள் வழங்கினர். அதுசமயம் மணமகன் ராமசாமி, "பொள்ளாச்சி வாசி"யின் வளர்ச்சிக்காக, ரூ 5—0—0 நன்கொடையாக தனது திருமணத்தை முன்னிட்டு அளித்தார்.

உணவை வீணாக்காதீர்கள்.

முத்தமிழ் வளர்ச்சிக் கழகம்.

நிர்வாகிகள் தேர்தல்.

ஷை கழகத்தின் உறுப்பினர் கூட்டம் ஸ்ரீ ம. வெ. கோனார் தலைமையில் நடைபெற்றது. புது ஆண்டுக்குக் கீழ்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர், வி. கே. பழனிசாமிக்கவுண்டர், உபதலைவர் வி. ஆர். கிருஷ்ணசாமி பி. ஏ, பொதுக்காரியதரிசி ம. வெ. கோனார், பொக்கிஷதார் ப. அழகப்பகவுண்டர், காரியதரிசி வ பா. அக்கலாஞ் செட்டி, உதவி மு வையாபுரி, மற்றும் ஒன்பது கமிட்டி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மேலும் எழுத்தாளர் பகுதி, நாடகப்பகுதி, மாணவர் பகுதி சொற்பொழிவு மன்றம் புத்தகசாலை கையெழுத்துப்பிரதி இவைகளுக்கும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

போன் நெம்பர். 63.

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

Prop: B பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi.